வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள Sri Ragaventhira Automobiles ,3A, Bajani Koil Street, Erode Main Road, Gobichettipalyam – 638 476 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்ற இரண்டைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தினரிடம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 70/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 793**

24. இந்நகராட்சிக்குட்பட்டட அலுவலகத்திற்கு ஜனவரி 26 குடியரசு தினத்தை முன்னிட்டு அலுவலக வளாகத்திற்கு அலங்கார மின் விளக்குகள் அமைக்கப்பட்டதற்கும் மற்றும் குடியரசு தினத்ன்று ஒலிபெருக்கி அமைத்ததற்கும் செலவினமாக ரூ.25100/- ஆகியுள்ளது செலவினத்தை நந்தினி ஆடியோ சிஸ்டம், கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம் ,
2. மேற்கண்ட செலவினத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமத பெற்ற பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 794**

25. இந்நகராட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களுக்கு தேவையான சமையல் உபகரணங்கள் வழங்கி ஈரோடு மாவட்ட ஆட்சியர் ஈரோடு அவர்களின் ந.க.எண்.26340/2023/பஅ7 நாள்.17.02.2024 ன் படி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து எடுத்து வரும் போக்குவரத்து செலவினத்தை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சமையல் உபகரணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஈரோடு அவர்களிடம் பெற்று வர ஆகும் போக்குவரத்து உத்தேச செலவினம் ரூ.5000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.319/2024/என்1)

**அலுவலக குறிப்பு : -** மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 795**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சி கரட்டூர் வளமீட்பு மையத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அரியலூர் Ultra Tech சிமெண்ட் ஆலைக்கும், திருச்சி டால்மியா சிமெண்ட் ஆலைக்கும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகள் மூலம் அனுப்பி வைத்திட வாடகைக்கு அமர்த்தும் முறையில் லாரிகளை விநியோகம் செய்யும் பணிக்கு 30.01.2024 அன்று ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் டன் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1. | The Explosive Enter Prices,<br>Kamban School,<br>21 PMK Rice Mill Street,Gobichettipalayam | ரூ.1,680/- |
| 2. | சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>முத்து வேலப்ப கவுண்டர் வீதி,<br>கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்,<br>(அருகில்) புதுப்பாளையம் | ரூ.1,705/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 இல் றிப்பிட்டுள்ள

The Explosive Enter Prices, Kamban School (Near), 21 PMK Rice Mill Street, Gobichettipalayam என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.களஎண்.2861/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனமான The Explosive Enter Prices, Kamban School, 21 PMK Rice Mill Street Gobichettipalayam அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது, 2. ஏற்றுக்கொள்ளப்பட்டது, 3. அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண் 796**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 2024 – 2025 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் கீழ்காணும் விபரப்படியான பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினங்களுக்கு அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விபரம்** | **உத்தேச செலவினம் இலட்சத்தில் ரூ.** |
|---|---|---|
| 1 | துப்புரவு பிரிவு வாகனங்கள், கொசு ஒழிப்பு பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும், கொசு மருந்துகள் கலந்து தெளிக்க டீசல் மற்றும் பவர் ஸ்ப்ரேயர்கள், புகைத்தெளிப்பான் இயந்திரங்கள் மற்றும் மிஷின்கள் போன்றவற்றிக்கு பெட்ரோல், டீசல், மற்றும் கிரீஸ் பிடிப்பதற்கு ஆகும் செலவினம் | 10.00 |
| 2 | இந்நகராட்சி 30 வார்டுகளிலும் வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவுகளை சேகரித்தல் மற்றும் செயலாக்கம் மையங்களுக்கு எடுத்து செல்லும் பணிகளுக்கு ஆகும் செலவினம் | 324.00 |
| 3 | பொது சுகாதாரப்பிரிவு நாளிதழ் விளம்பரக் கட்டணம் மற்றும் வழக்குக் கட்டணம் ஆகும் செலவினம் | 1.00 |
| 4 | நகராட்சி பள்ளி கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகங்களை தூய்மைப்படுத்தும் பணி மேற்கொள்ள (School Toilet) புற ஆதார (Out Sourcing Basis) முறையில் ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் 19 பணியாளர்களை கொண்டு கல்வி நிதியில் பணி மேற்கொள்ளுதல் ஆகும் செலவினம் | 15.00 |

வரிசை எண் 1 இல் குறிப்பிட்டுள்ள எரிபொருட்களான பெட்ரோல், டீசல், ஆயில், கிரீஸ் போன்றவைகளை இந்நகராட்சியின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட டீலரான M/s. பாலமுருகன் ஏஜென்சிஸ், கோபிசெட்டிபாளையம் நிறுவனத்திடமிருந்து அவ்வப்போது நிர்ணயம் செய்யும் விலை விகிதத்தில் கொள்முதல் செய்து பயன்படுத்தி கொள்ள, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி செலவினங்களில் வரிசை எண்.1,2,3 வரை உள்ள பணிக்கு ஆகும் செலவினங்களைவ ருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும், வரிசை எண். 4 இல் உள்ள செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 444/2021/எச்1)

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 797**

28. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள், மற்றும் கொசு தடுப்பு பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் புகைத் தெளிப்பான் இயந்திரங்களுக்கு பாரத் பெட்ரோலியம் கார்ப்ரேசன் நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட டீலரான M/s. பாலமுருகன் ஏஜென்சீஸ், கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் 01.03.2024 ஆம் தேதி முதல் நிறுவனங்கள் நிர்ணயம் செய்யப்படும் விலை விகிதத்தில் எரிபொருட்கள் பெற்றுக்கொண்டு பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.கஎண்.971/2020/எச்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 798**

29. இந்நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள வீடுகள், கடைகள், நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் தினமும் உருவாகும் கழிவுகளை தரம் பிரித்து சேகரித்து செயலாக்கம் செய்யும் மையங்களில் ஒப்படைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண். 33552/2022/EA– 2 – SWM – 4 நாள். 10.01.2023 ன் படி நிர்வாக அனுமதி பெற்று மூன்றாண்டு காலத்திற்கு இப்பணியினை மேற்கொள்ள 27.03.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இவ்வொப்பந்தபுள்ளியில் M/s. LD Manpower Solutions, Vellore (DT), நிறுவனத்தினரின் ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் ஏற்று கொள்ளப்பட்டு அந்நிறுவனம் மூலம் இப்பணியினை ஓர் ஆண்டிற்கு மேற்கொள்ளவும் அதன் பிறகு நிறுவனத்தின் செயல்பாடுகளின் அடிப்படையில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு பணி வழங்கவும் நகர்மன்ற தீர்மான எண்.449 நாள். 13.04.2023 ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்நிலையில் மேற்படி நிறுவனத்தினரின் ஓராண்டு பணி 30.04.2024 ஆம் தேதியுடன் முடிவடைவதால் பொதுசுகாதார பணியின் அவசியம் கருதியும் மேற்படி நிறுவனத்தின் ஓராண்டு கால செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்து வருவதால் ஒப்பந்த நிபந்தனைகளின் (Tender Conditions) படியும், (Bid Documents) ஒப்பந்தத்தின் (Agreement) படியும் 01.05.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு அந்நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பணி மேற்கொள்ளவும் ஏற்கனவே அந்நிறுவனத்திற்கு வழங்கி வரும் Tipping Fee வுடன் 10 சதவீதம் உயர்த்தி வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.கஎண்.1609/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 799**

30. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு தேவைப்படும் தொழில் உரிம விண்ணப்பங்கள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 ன் படி அபராதம் விதித்தல் படிவங்கள் டெங்கு காய்ச்சல் பரவலை தடுக்க கொசுபுழு உற்பத்தியினை தடுக்க தவறியவர்களுக்கான அபராத கட்டண படிவங்கள் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்டிகோ திருச்சியில் அந்நிறுவனத்தின் விலை விகிதத்தில் ரூ. 20,000 மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0218/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 800**

31. கோபிசெட்டிபாளையம் நகர எல்லைக்குள் குடிநீர் விநியோகத்தில் சில இடங்களில் சுலிஸ் வால்வு தொட்டிகள் பழுதடைந்தும் மூடுகற்கள்(cover slab) பழுடைந்து உடைந்த நிலையில் உள்ளதால் போக்குவரத்து பாதிப்பதோடு ஆபத்து விளைவிக்கும் நிலையில் உள்ளது. மேலும் சில இடங்களில் சிறு மின்விசைபம்பு ஆழ்துளை கிணறு அமைந்துள்ள இடங்கள் போக்குவரத்துக்கு இடையூராகவும், ஆபத்து மற்றும் விபத்து ஏற்படும் நிலையில் அமைந்துள்ளது.

எனவே, ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார் மற்றும் குழாய்களை தரைமட்டத்தில் தொட்டி கட்டி(Bme pit)அமைக்கும் பணிக்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ, 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது மற்றும் பாராளுமன்ற தேர்தலை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.320/2024/E1)

**அலுவலக குறிப்பு** 1. அனுமதிக்கலாம்

2. மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 801**

32. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண் 28 கிழக்கு தேர் வீதிக்கு மேல் புறம் ராஜம் நகர்பகுதியில் தண்ணீர் பற்றகுறையுள்ளதால் அப்பகுதியில் உள்ள கங்குவார் வீதி சிறுமின் விசைபம்பு ஆழ்துளை கிணற்றிலிருந்து ராஜன் நகர் பகுதிக்கு சின்டெக்ஸ் HDPE தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செல்ல ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1,25 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பாராளுமன்ற தேர்தல் மற்றும் கோடைகாலத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.321/2024/E1)

**அலுவலக குறிப்பு**. 1.அனுமதிக்கலாம்

2. மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 802**

33. இந்நகராட்சியில் நமக்கு நாமே 2021–22 ன் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் வார்டு எண்.3 ராமர் எக்ஸ்டன்சன் பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை புனரமைக்கும் பணியினை மேற்கொள்ள 04.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கேராப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழுங்கியுள்ளார்கள் .

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொழில்நுட்ப தகுதி விவரம் |
|---|---|---|
| 1. | திருவாளர். திருமுருகன் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர், திருப்பூர். | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |
| 2. | திரு.மூர்த்தி திருமுருகன்பூண்டி திருப்பூர் | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பந்த விலை பட்டியலில் (Price Bid) திறக்க 26.12.2023 ல் அறிவிப்பு வழுங்கப்பட்டு விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பு | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.மூர்த்தி<br>திருமுருகன்பூண்டி<br>திருப்பூர் | (ரூ. 11263097.49) | **0.01 சதவீதம்**<br>மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட குறைவு<br>(ரூ. **11262734.02**) |
| 2 | திருவாளர். திருமுருகன் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர், திருப்பூர். | | **3.83 சதவீதம்**<br>மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட அதிகம்<br>(ரூ **11694835.39**) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட 0.01% சதவீதம் குறைவாக வழங்கியுள்ள திரு.மூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது ( ந.க.எண். 3297 / 2021 /இ1 )

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ.). .மன்றம் பதிவு செய்யலாம்

ஆ). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA மற்றும் பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது, 2 . ஏற்றுக்கொள்ளப்பட்டது, மன்றத்தீர்மான எண் 803**

34. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் ராமர் எக்ஸ்டன்சன் பகுதியில் Incinerator அமைக்கப்பட்டுள்ளது.இதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சான்று பெற (Consent to operate) தற்பொழுது 15 வது நிதிக்குழு திட்டத்தில் Thermocenser அமைக்க ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நேரில் ஆய்வு செய்த செயற்பொறியாளர் மாசு கட்டுப்பாட்டு வாரியம் அவர்கள் அதிநவீன Thermocenser அமைக்கவும் அதற்கு உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சம் ஆகும் என தெரிவித்துள்ளார்கள். அதனை அமைத்தால் மட்டுமே மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெற முடியும். மேலும் நகர்மன்ற தீர்மான எண்.671 நாள்.31.10.2023 அன்று ரூ.4.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.5.00 இலட்சத்தை திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர்கள் கட்டணம் (SUC) இல் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர்கள் கட்டணம் (SUC) இல் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 804**

35 . கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் சாலைப்பணிகள் மேற்கொள்ள இல் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.426/2024/பி1 நாள்.03.02.2024 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண்.204/2024/இ1

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) | நிர்வாக அனுமதி எண். |
|---|---|---|---|---|
| | **15வது நிதிக்குழு மானியம் Untied Grant 2023-2024** | | | |
| 1 | Providing Renewal of BT Surface to the SakthiShanthi Nagar 1st Street - 057015R0450,Vasthu Nagar Cross Street 2 - 057015R0469, Vasthu Nagar Cross Street 3-057015R0470,Vasthu Nagar Cross Street 4 - 057015R0471 ,Vasthu Nagar, Cross Street - 5 - 057015R0472, Vasthu Nagar, Cross Street - 6 - 057015R0473, Subannan Street Cross 8 - 057016R0493, Subannan Street Cross 1 - 057016R0489, Subannan Street 8th SubLane - 057016R0492, Subannan Street 10th Lane - 057016R0490,Muruganan Street - 057020R0602, Muthuvelappan Street - 057020R0597, Kamatchiamman Koil Poor pati Lane-1- 057021R0618 and Samynathapuram Road - 057023R0658,Mahalakshmi Nagar - 057025R0723,SivaSakthi Nagar(Anna Nagar)- 1 - 057029R0810, SivaSakthi Nagar(Anna Nagar) -2 - 057029R0811, SivaSakthi Nagar(Anna Nagar) - 3 - 057029R0812,Sri Arunachala Nagar - 057030R0838, Arunachalam Nagar - 1 - 057030R0839, in Gobichettipalayam Municipality | 1.857 | 84.00 | 354<br>2023-24 |
| | **15வது நிதிக்குழு மானியம் Untied Grant 2024-2025** | | | |
| 2 | Providing Renewal of BT Surface to the PonNagar - 057001R0002,Nagamalai Extension Cut Road 2 - 057001R0025,Krishna Nagar Main Road - 057001R0028, Krishna Nagar Extension 1st Main Road - 057001R0029, Anna Street - 057007R0187, Karumaya 2nd Street - 057007R0181,Narayanan Nagar Main Road - 057011R0313,Munsif street - 057012R0402, Muthuvelappan Nagar - 057014R0436,Kalyani Nagar Main Street - 057014R0443,Sakthi Vinayagar Nagar Extension - 057005R0143, in GobiChettipalayam Municipality | 1.823 | 93.00 | 355<br>2023-24 |
| | **மொத்தம்** | | **177.00** | |

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண் 805**

36. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 4இல் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் செல்லும் பைப் உடைப்பு ஏற்ப்பட்டு கழிவு செல்ல முடியாமல் உள்ளது. இதனால் அசுத்தம் ஏற்படுவதுடன் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவதாக நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே அக்கழிப்பிடத்திற்கு பைப் லைன் சரிசெய்யவும் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்யவும் ரூ.40,000/– ஆகும். இப்பணியை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் நிதியில் (SUC) செய்ய மன்ற அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு;–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 806**

37. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 20.02.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபைளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 , 04, 19 உள்ள சிறு மின் விசை பம்ப் தண்ணீர் தொட்டி பழுது மற்றும் மாற்றியமைக்கும் பணி | 1,25,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.03 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 1.85 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04,15,16 22,25,26,29,30 ஆகிய இடங்களில் உள்ள திறந்த வெளிக்கிணற்றுக்கு MS Grill அமைத்து பாதுகாப்பு செய்யும் பணி | 2,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 2.99 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குப்பட்ட வார்டு எண்.28 , கிழக்கு தேர் வீதி (இராஜன் நகர்) பகுதியில் தண்ணீர் வசதி செய்தல் | 1,25,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.41 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 1.80 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுலீஸ் வால்வு தொட்டி அமைத்தல் மற்றும் பழுதடைந்த தொட்டி சீரமைக்கும் பணி | 3,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 1.19 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**ந.க.எண். 2051/2023/இ1**

**அலுவலகக்குறிப்பு :-**

.மன்றம் அனுமதிக்கலாம்

1. மேற்படி பணிகளில் வ.எண்.1 க்கு-குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணிகளில் வ.எண்.2 க்கு-குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண்3 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
4. மேற்படி பணிகளில் வ.எண்4 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது வரிசை எண் 1 முதல் 4 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டது,**
**மன்றத்தீர்மான எண் 807**

38. கோபிசெட்டிபாளையம் நகராட்சி ராமர் எக்ஸ்டென்சன் பகுதியில் உள்ள நுண் உர செயலாக்க மையத்தின் வடக்கு பகுதியில் இருந்த மண் திட்டுகளையும், செடிகொடி புதர்களையும் JCB வாகனம் கொண்டு சுத்தம் செய்து சமன் செய்யும் பணிக்கு 22.02.2024 அன்று ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ஒரு மணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1. | The Explosive Enter Prices,<br>Kamban School,<br>21 PMK Rice Mill Street,Gobichettipalayam | ரூ. 1000 /- |
| 2. | சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>முத்து வேலப்ப கவுண்டர் வீதி,<br>கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்,<br>(அருகில்) புதுப்பாளையம். | ரூ. 1,100 /- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள M/s.The Explosive Enter Prices, Kamban School (Near), 21 PMK Rice Mill Street, Gobichettipalayam என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.கஎண்.0044/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண் 808**

39. வார்டு எண். 25, மில்ரோடு, கதவு எண். 85 வரிவிதிப்பு எண். 057/025/900004 (பழைய வரி விதிப்பு எண். 057/17948) கொண்ட தொலைபேசி அலுவலக கட்டிடத்திற்கு ஏற்கெனவே அரையாண்டு வரி ரூ.2,14,217/- எனவும், 2022-2023 சொத்து வரி சீராய்வின் படி 01.04.2022 முதல் அரையாண்டு வரி ரூ.4,28,434/- எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. வார்டு எண். 23, ராம்நகர், கதவு எண். 2சி, வரிவிதிப்பு எண். 057/023/900291 (பழைய வரி விதிப்பு எண். 057/9834) கொண்ட கோட்டப்பொறியாளர்(நகரம்) B.S.N.L கொண்ட கட்டிடத்திற்கு ஏற்கெனவே அரையாண்டு வரி ரூ.20,066/- எனவும், 2022-2023 சொத்து வரி சீராய்வின் படி 01.04.2022 முதல் அரையாண்டு வரி ரூ.40,132/- எனவும் நிர்ணயம் செய்யயப்பட்டு உள்ளது.

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P.No 12959 to 12963/2012ன் 17.09.2019 ந் தேதிய தீர்ப்பாணையில், மேற்படி பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (B.S.N.L) நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு மறு அளவீடு செய்து, மேற்படி மறு அளவீடுகளின்படி 01.04.2011 முதல் முன்தேதியிட்டு புதியதாக வரி விதிப்பு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி B.S.N.L நிறுவனம், ஈரோடு அவர்களின் கடிதம் எண். SDE BP/SC GDM-DTO 2005-2023/75 நாள். 13.04.2023 ம் தேதிய கடிதத்தில் மேற்படி கட்டிங்களுக்கான அளவீடுகள் வழங்கப்பட்டுள்ளது.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 09.02.2024ந் தேதிய குறிப்பில், மேற்படி அளவீடுகளை நேரில் ஆய்வு செய்து, பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (B.S.N.L) நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு கீழ்க்கண்டவாறு மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தீர்ப்பின்படி 01.04.2011 ம் தேதி முதல் முன்தேதியிட்டு கணக்கீடு செய்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். வரி விதிப்பு செய்யப்பட்ட விபரம் :

| வ.எண். | வரி விதிப்பு எண் | கட்டிட பயன்பாடு | ஏற்கெனவே உள்ள அரையாண்டு சொத்து வரி | புதியதாக 01.04.2011 முதல் வரி விதிப்பு செய்யப்பட்ட அரையாண்டு வரி | 2022-2023 சொத்து வரி சீராய்வின் படி 01.04.2022 முதல் உயர்வு செய்யப்பட்ட அரையாண்டு வரி |
|---|---|---|---|---|---|
| 1 | 057/17948 | வணிகம் | ரூ.2,14,217/- | ரூ.1,19,606/- | ரூ.2,39,212/- |
| | | குடியிருப்பு | | ரூ.2,302/- | ரூ.3,453/- |
| | | மொத்தம் | **ரூ.2,14,217/-** | **ரூ.1,21,908/-** | **ரூ.2,42,665/-** |
| 2 | 057/9834 | வணிகம் | **ரூ.20,066/-** | **ரூ.14,883/-** | **ரூ.29,766/-** |

மேலும் வருவாய் ஆய்வர் அவர்கள், தற்போது சொத்து வரி கேட்பு பதிவேட்டில், பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (B.S.N.L) நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு ஏற்கெனவே உள்ள அரையாண்டு வரித்தொகையில், புதியதாக முன்தேதியிட்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அரையாண்டு வரியினை கழித்தது போக மீதமுள்ள வரிதொகையினை மன்றத்தின் அனுமதி பெற்று அந்தந்த அரையாண்டுகளுக்கு 01.04.2011 முதல் 31.03.2024 வரை முன் தேதியிட்டு தள்ளுபடி செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்களின் 09.02.2024 ந் தேதிய குறிப்பின்படி, பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (B.S.N.L) நிறுவனத்திற்கு சொந்தமான இரண்டு கட்டிடங்களுக்கும் முன்தேதியிட்டு தள்ளுபடி செய்யவேண்டிய சொத்துவரி தொகை விபரம் பின் வருமாறு:

| | | | | | | | அரையாண்டு வரி ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|---|
| | வ. எண் | வரி விதிப்பு எண் | ஏற்கெனவே உள்ள அரையாண்டு சொத்து வரி | புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்ட அரையாண்டு வரி | தள்ளுபடி செய்ய வேண்டிய அரையாண்டு வரிதொகை | தள்ளுபடி விபரம் | மொத்தம் |
| அ | 01.04.2011 (2011–2012 முதல் அரையாண்டு) முதல் 31.03.2022 (2021–2022 இரண்டாம் அரையாண்டு வரை 22 அரையாண்டுகள் | | | | | | |
| | 1 | 057/17948 | 2,14,217/– (214217 x 22 =4712774/–) | 1,21,908/– (121908 x 22 =2681976/–) | 92,309/– | 92309 x 22 =20,30,798/– | 20,30,798/– |
| | 2 | 057/9834 | 20,066/– (20066x22 =441452/–) | 14,883/– (14883x 22 =327426/–) | 5,183/– | 5,183 x 22 =1,14,026/– | 1,14,026/– |
| | | மொத்தம் | 51,54,226/– | 30,09,402/– | 97,492/– | 97492 x 22 = 21,44,824 | 21,44,824/– |
| ஆ | 01.04.2012 (2022–2023 முதல் அரையாண்டு) முதல் 31.03.2024 (2023–2024 இரண்டாம் அரையாண்டு வரை 4 அரையாண்டுகள் | | | | | | |
| | 1 | 057/17948 | 4,28,434/– (428434x4 =1713736/–) | 2,42,665/– (242665x4 =970660/–) | 1,85,769/– | 1,85,769 x 4 =7,43,076/– | 7,43,076/– |
| | 2 | 057/9834 | 40,132/– (40132 x 4 =160528/–) | 29,766/– (29766x4 =119064/–)12 | 10,366/– | 10,366 x 4 = 41,464/– | 41,464/– |
| | | மொத்தம் | 18,74,264/– | 10,89,724/– | 1,96,135/– | 1,96,135 x 4 = 7,84,540 | 7,84,540/– |

| | ஏற்கெனவே உள்ள சொத்து வரி ரூ. | புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்ட வரி ரூ. | தள்ளுபடி செய்ய வேண்டிய வரிதொகை ரூ. |
|---|---|---|---|
| அ | 51,54,226/– | 30,09,402/– | 21,44,824/– |
| ஆ | 18,74,264/– | 10,89,724/– | 7,84,540/– |
| மொத்தம்(அ+ஆ) | **70,28,490/–** | **40,99,126/–** | **29,29,364/–** |
| **26 அரையாண்டுகளுக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய மொத்த வரிதொகை** | | | **ரூ.29,29,364/–** |

எனவே மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணையின்படியும், வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படியும், பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (B.S.N.L) நிறுவனத்திற்கு சொந்தமான இரண்டு கட்டிடங்ளுக்கும், 01.04.2011 முதல் 31.03.2024 வரை ஏற்கெனவே உள்ள சொத்து வரி

தொகை ரூ.70,28,490/- ல் தற்போது புதிய மறு அளவீட்டின்படி 01.04.2011 ம் வருடத்தில் அப்போதைய சொத்து வரி கணக்கீட்டின்படி புதியதாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வரி தொகை ரூ.30,09,402/- மற்றும் 01.04.2022 முதல் சொத்து வரி சீராய்வின்படி உயர்வு செய்யப்பட்ட வரித்தொகை ரூ.10,89,724/- ஆக மொத்தம் ரூ.40,99,126/- ஐ கழித்தது போக, மீதமுள்ள 01.04.2011 முதல் (2011-2012 முதல் அரையாண்டு) 31.03.2024 வரை (2023-2024 இரண்டாம் அரையாண்டு) மொத்தம் 26 அரையாண்டுகளுக்கு ரூ.29,29,364/- ஐ (ரூபாய் இருபத்து ஒன்பது இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து முன்னூற்று அறுபத்தி நான்கு மட்டும்) சொத்து வரி கேட்பிலிருந்து முன்தேதியிட்டு தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 5276/2010/அ1)

**அலுவலக குறிப்பு :**

பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (B.S.N.L) நிறுவனத்திற்கு சொந்தமான வரிவிதிப்பு எண். 057/17948 மற்றும் 057/9834 கொண்ட கட்டிடங்களுக்கு 01.04.2011 முதல் (2011-2012 முதல் அரையாண்டு) 31.03.2024 வரை (2023-2024 இரண்டாம் அரையாண்டு) மொத்தம் 26 அரையாண்டுகளுக்கு ரூ.29,29,364/- ஐ சொத்து வரி கேட்பிலிருந்து முன்தேதியிட்டு தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.809**

40. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தற்பொழுது கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2022-2023 ல் கட்டப்பட்டு வரும் அறிவுசார்மையம் மற்றும் நூலக கட்டிடத்திற்கு மேசைகள் நாற்காலிகள் மற்றும் இதர சமான்கள் கொள்முதல் செய்ய மதிப்பீட்டில் ரூ.9.00 இலட்சம் மற்றும் இதர செலவினங்கள் ரூ.0.33 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அறிவு சார்மையம் கட்டிடத்திற்கு மேசைகள், நாறிகாலிகள் மற்றும் இதர சாமான்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.17.69 இலட்சம் செலவினம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, 19.69 இலட்சத்தில் ரூ.9.33 இலட்சம் போக மீதமுள்ள தொகை.ரூ.8.36 இலட்சம் வருவாய் நிதியில் செலவினம் செய்யப்பட வேண்டும். எனவே நகராட்சி வருவாய் நிதியின் கீழ் ரூ.8.36 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.810**

41. நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் 2003-2004ம் வருடம் முதல் கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கான வாடகை நிலுவை இருந்து வருகிறது. மேற்படி நிலுவை வாடகை தொகைகளை வசூல் செய்ய பல வகையில் நடவடிக்கை மேற்கொண்டும் வசூல் செய்ய இயலவில்லை.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | கடையின் பெயர் | வருடம் | நிலுவை தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 057/92 | ஜி.கே.ரங்கசாமி | புதியாஸ்பத்திரி வீதி கடை எண் 2 | 2018-2019 | 6,704/- |
| 2 | 057/94 | சி.சுப்ரமணியம் | புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 4 | 2018-2019 | 8,618/- |
| 3 | 057/95 | கே.லட்சுமி | புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 5 | 2018-2019 | 9,345/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 057/96 | ஜி.கே.வெங்கடாசலம் | புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 6 | 2018-2019 | 14,647/- |
| 5 | 057/97 | பி.சிவக்குமார், | புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 7 | 2018-2019 | 15,599/- |
| 6 | 057/98 | குப்புசாமி | புதியாஸ்பத்திரி வீதி கடை எண்.8 | 2018-2019 | 16,051/- |
| 7 | 057/530 | எம்.பி.ரவிக்குமார் | வாரசந்தை கடை எண். 01 | 2017-2018 2018-2019 | 71,471/- |
| 8 | 057/531 | எம்.பி.ரவிக்குமார் | வாரசந்தை கடை எண். 02 | 2017-2018 2018-2019 | 48,563/- |
| 9 | 057/532 | சசிதரன் | வாரசந்தை கடை எண். 03 | 2017-2018 2018-2019 | 56,165/- |
| 10 | 057/865 | நாகுசரஸ்வதி | MUDF- பழைய பேருந்து நிலைய கடை எண். 49 | 2018-2019 | 12,559/- |
| 11 | 057/526 | திருமூர்த்தி | தினசரி சந்தை கடை எண். 6 | 2021-2022 | 19,020/- |
| 12 | 057/527 | மௌலானா | தினசரி சந்தை கடை எண். 7 | 2021-2022 | 37,108/- |
| 13 | | பாத்திமா பீபி | பழையாஸ்பத்திரி வீதி கடை எண். 22 | 2003-2004 | 31,500/- |
| 14 | | மேலாளர், காதி கிராப்ட் | பழைய லாரி நிலைய கடை எண். 2 | 2004-2003 | 2,419/- |
| 15 | 057/50 | தெய்வானையம்மாள் | ல.கள்ளிப்பட்டி கடை எண். 1 | 2000-2021 | 30,000/- |
| | | | | **மொத்தம்,** | **3,79,769/-** |

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 19.02.2024 ம் தேதிய குறிப்பில், கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி நிலுவை வாடகை உள்ள குத்தகை இனங்களில் வரிசை எண். 1 முதல் 10 வரை உள்ள கடைகளுக்கு 2017-2018 ஆம் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் வாடகை மறு மதிப்பீடு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி கடை குத்தகைதாரர்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்ட வாடகையினை செலுத்தாமலும், எந்தவிதமான தகவலும் இல்லாமல் தங்களது கடைகள் காலி செய்து விட்டனர். மேற்படி கடைகுத்தகைதார்களின் வைப்புத்தொகையிலிருந்து தொகை சரிசெய்யப்பட்டது போக மீதம் ரூ.2,59,722/- நிலுவை தொகை இருந்து வருகிறது. வரிசை எண். 11 முதல் 12 வரை உள்ள இரண்டு கடைகள் புதிய தினசரி சந்தை வணிக வளாகம் கட்டுவதற்கான இடிக்கப்பட்டவிட்டது.

மேற்படி குத்தகைதாரர்களை பலமுறை தொடர்பு கொண்டும், தொடர்பு கொள்ள இயலாத காரணத்தினாலும், மௌலானா என்பவர் இறந்து விட்டதாலும், நிலுவை வாடகை வசூல் செய்ய இயலவில்லை. மேற்படி கடைகுத்தகைதாரர்களின் வைப்புத் தொகை கணக்கிலிருந்து சரிசெய்யப்பட்டது போக ரூ.56,128/- நிலுவை இருந்து வருகிறது. வரிசை எண். 13 முதல் 15 வரை உள்ள கடைகளுக்கான நிலுவை வாடகை ரூ.63,919/- இணையவழி கேட்பு வசூல் நிலுவை (UTIS ONLINE DCB) அறிக்கையில் இல்லை, ஆனால் பல்வகை கேட்பு பதிவேட்டில் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே UTIS ONLINE DCB மற்றும் பல்வகைகேட்பு பதிவேட்டின் ஆண்டு கணக்குகளை சரிசெய்யும் பொருட்டு, மேற்கண்ட தவறுதலாக பதிவு செய்யப்பட்ட தொகை ரூ.63,919/- ஐ நீக்கம் செய்யலாம்.

மேற்கண்ட விபரங்களின்படி நிலுவை தொகை உள்ள இனங்களின் வருட வாரியான விபரம்.

| வ.எண். | வருடம் | நிலுவை தொகை |
|---|---|---|
| 1 | 2003-2004 | 31,500/- |
| 2 | 2004-2003 | 2,419/- |
| 3 | 2017-2018 | 1,03,999/- |
| 4 | 2018-2019 | 1,55,723/- |
| 5 | 2020-2021 | 35,483/- |
| 6 | 2021-2022 | 50,645/- |
| | மொத்தம் | 3,79,769// |

எனவே மேற்படி குத்தகை இனங்களின் நிலுவை வாடகையினை வசூல் செய்ய மார்க்கம் இல்லாத பட்சத்தினாலும், சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களை தொடர்பு கொள்ள இயலாத காரணத்தினாலும், UTIS ONLINE DCB மற்றும் பல்கேட்பு பதிவேட்டின் ஆண்டு கணக்குகளை சரிசெய்ய வேண்டியுள்ளதாலும், மேற்படி பட்டியலில் கண்டுள்ளபடி அந்தந்த வருடங்களுக்கான நிலுவை தொகை மொத்தம் ரூ.3,79,769/- ஐ மன்றத்தின் அனுமதி பெற்று குத்தகை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின்படி, மேற்படி பட்டியலில் கண்டுள்ள குத்தகை நிலுவை தொகையினை வசூல் செய்ய இயலாத காரணத்தினாலும், சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களை தொடர்பு கொள்ள இயலாத காரணத்தினாலும், UTIS ONLINE DCB மற்றும் பல்வகை கேட்பு பதிவேட்டின் ஆண்டு கணக்குகளை சரிசெய்ய வேண்டியுள்ளதாலும், அந்தந்த வருடங்களுக்கான நிலுவை தொகை மொத்தம் ரூ.3,79,769/- ஐ குத்தகை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.811**

42. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பால வித்யாலயா பள்ளி வளாகத்தில் தமிழக முதலமைச்சர் காலை உணவு திட்டத்தில் சமையற்கூடம் கட்டப்பட்டு காலை உணவுத்திட்டம் வழங்கப்பட்டு வருகிறது. அக்கட்டிடத்தை ஒட்டி வடிகால் தண்ணீர் தேங்கி அசுத்தம் ஏற்படுகிறது. எனவே, அப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து முன்புறமுள்ள காலியிடத்தில் **Paver Block** அமைக்கவும், சிறுபாலம் அமைக்கவும், கிரில் வேலை, மேற்கூரை **G.I.Sheet** செப்பனிடல் வெளிபுற வண்ணம் பூசுதல், எலக்ட்ரிக்கல் வேலை மற்றும் கழிப்பறை சுவர் டைல்ஸ் பதிக்கவும், ரூ.9.80 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** ; 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.812**

(ஒப்பம்)- என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி